# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.07.23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# *சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *சபையைக்* (ITSC) *(கூட்டிணைத்தல்)*

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

***சர்வதேச பாரம்பரிய சிகெலவெத*** **(Sihelogy)** ***சபையைக்*** **(ITSC)**
***கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்***

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *சபை* (ITSC) *(கூட்டிணைத்தல்)*

### *சர்வதேச பாரம்பரிய சிகெலவெத (*Sihelogy*) சபையைக்* (ITSC) *கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்*

*முன்னுரை*

“*சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *சபை* ITSC *என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சபையொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சபையொடு தொடர்புபட்ட அதனது குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:*

*அத்துடன், சொல்லப்பட்ட சபையானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதற்குமுன்னர் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் கூட்டிணைக்கப் படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும்:*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயர்*

***1.*** *இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *சபையைக்* (ITSC) *(கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *சபையைக் கூட்டிணைத்தல்*

***2.*** *(1) இச்சட்டம், தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “சர்வதேச பாரம்பரிய சிகெலவெத (*Sihelogy*) சபையின்* (ITSC)" *தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் “கூட்டிணைக்கப்பட்ட குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ‘‘சர்வதேச பாரம்பரிய சிகெலவெத (*Sihelogy*) சபை* (ITSC) ” *என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட*

*கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதோடு, பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.*

*(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அது தொடர்பாக ஏற்புடையதாதல் வேண்டும்.*

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

*__3__. (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக் கப்படுவதற்கான பொதுவான குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின் றது –*

*(அ) சர்வதேச பாரம்பரிய சிகெலவெத* (Sihelogy) *நிறுவகம்* (ITSI) *எனும் பெயரில் பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றினைத் தாபித்தல்;*

*(ஆ) சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்கள் மூலமாகப் பாரம்பரிய சிகெல மருத்துவம், சிகெல செவிலியம், சிகெல வேளாண்மை, சிகெல தற்காப்புக் கலை, சிகெல சோதிடம், பேயோட்டலுக்கான சிகெல முறை, மற்றும் சிகெல நடனம் ஆகியவற்றினை மேம்படுத்தல்;*

(இ) *சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் பயன்படுத்திச் சகல சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களின் மத்தியில் பாரம்பரிய சிகெலவெத வினை மேம்படுத்தல்;*

(ஈ) *நல்வாழ்வுக்கான சூழலியல் சுற்றுலாத்துறைக்கு* (Wellness Eco tourism) *உதவி வழங்குவதால், சர்வதேசச் சுற்றுலாச் செயற்பாடுகளை மேம்படுத்தி அதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் மனநல மற்றும் உடல் நல ஆரோக்கியத்தினை வளப்படுத்த உதவுவதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணி ஈட்டல்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்;*

(உ) *சகல நோய்களுக்குமெனத் தனித்துவமான சிகெலவெத உள்நோயாளர் பிரிவொன்றினை நடத்துதல்;*

(ஊ) *வெளிநாடுகளில் சிகெலவெத நிறுவகத்தின் கிளைகளைத் தாபித்தல;*

(எ) *வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் கல்வி மற்றும் சமூகக் கற்கைநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்;*

(ஏ) *சிங்களத் தற்காப்புக் கலையினை உள்நாட்டுச் சமுதாயங்களின் மத்தியிலும் வெளிநாட்டுச் சமுதாயங்களின் மத்தியிலும் பிரபல்யப்படுத்துவதன் மூலம் அதனைப் பொதுநலவாயப் போட்டிகளில் ஒரு போட்டியாகச் சேர்த்தல்;*

(ஐ) *மூலிகைத் தோட்டமொன்றினை உருவாக்குதல் மற்றும் சகல வடிவிலுமான மருத்துவச் சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் சகல வகையான மூலிகைகளையும் வேறுபாடின்றி வளர்ப்பதற்காக அனுமதியினைப் பெற்று அவ்வாறான மூலிகைத் தோட்டங்களைச் சமூகத்தில் பிரபல்யப்படுத்தல்;*

*(ஓ) சகல பாடசாலை மாணவர்களினதும் மனவழுத்தத்தினையும் உடல் பலவீனங்களையும் நிவர்த்திப்பதற்காகவும் தெற்றா நோய்களை நிவர்த்திப்பதற்காகவும் சிகெலவெத நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல;*

*(ஓ) சிலெவேத செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகப் பாரம்பரிய மருத்துவக் கிராமத்தில் உள்ள பிரதேசத்தின் ஒரு பகுதியினைப் பெறுதல் மற்றும் சிகெலவெத கருத்திட்டங்களுக்காகப் பிரதானமாக அநுராதபுரம் மற்றும் மினுவாங்கொட பிரதேசங்களில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளைப் பயன்படுத்துதல;*

*(ஔ) முதியோர் இல்லங்களுக்கு பதிலாக பராமரிப்பு மையத்தினை நிறுவுதல் மற்றும் அனர்த்த முகாமைத் துவத்திற்காக சிகெலவெத மோட்டார்சுமக்கின் அணியினை ஈடுபடுத்தல; மற்றும்*

*(க) ஒரு சமூக நலன்புரி நிறுவகமாக சிகெல்வெத மக்கள் நிவாரண அறக்கொடை நிறுவகத்தினை நிறுவுதல்.*

*(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழுவானது அத்தகைய நடைமுறைப்படுத்துவதில், இனம், மதம், பொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் அல்லது அத்தகைய வேறு ஏதுவின் அடிப்படையில் ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

*கூட்டிணைக்கப்பட்ட குழு ஆனது அமைச்சின் அல்லது அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது மாகாணத்தின் அல்லது மாகாண சபையின் பணியுடன் முரண் பாடில்லை என்பதனை உறுதிப்படுத்தல்*

***4***. *கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள்ளானவை, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் மற்றும் ஏதேனும் அமைச்சினால் அல்லது அரசாங்கத்தின் திணைக்களத்தினால் அல்லது மாகாண சபையின் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.*

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** *(1)* இச்சட்டம் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான பதவி தாங்குநர்களின் அத்தகைய எண்ணிக்கையினரைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*(2)* (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முகாமைத்துவ சபையில் பதவி வகிக்கும் உறுப்பினர்களில் (ஆ) பந்தியின் கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமைய, (ஈ) பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் மற்றும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது சபை நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் இடைக்காலச் சபையாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஒவ்வாததாக விராதவையுமான இடைக்கால பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்திற்காகவும் ; கூட்டிணைக்கப்பட்ட குழுவானது முதலாவது பேரவையின் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கப்படுவதற்காகவும் அல்லது நியமிக்கப்படுவதற்காகவும் விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயினும், 7 ஆம் பிரிவின் *(2)* மற்றும் *(3)* ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் *(1)* ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) இடைக்கால பேரவையின் ஏதேனும் முடிபானது ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்

*(3)* (அ) போசகர்களும் மதியுரைஞர்களும் உட்பட சபையின் பதவிதாங்குதர் ஒவ்வொருவரும் இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர். போசகர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி கழிந்த பின்னர் மீள நியமனத்துக்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவி விலகுதல், உடற்றகுதியினம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், கூட்டுத்தாபனமானது அதன் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை திரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது வேண்டும்.

(இ) பந்தி (ஆ)வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் பின்றுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் தததுவங் கள்*

***6*.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது பின்வரும் தத்துவம் உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் கொள்ளுதற்கும் வாடகைக்கு கொடுக்கவும் நிருமாணிக்கவும் புனரமைக்கவும் அத்துடன் வேறு வகையில் பெறவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமான தெனக் கருதக்கூடியவாறு அதனைக் கையாளவும் அல்லது கையுதிர்க்கவும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது அதன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானவாறு நேரடியாகவோ அல்லது நடைமுறையில் தேவையான கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரி அல்லது பிரதிநிதியினால் அனைத்து ஒப்பந்தங்கள் அல்லது ஒப்பந்தங்களில் நுழையவும் அவற்றை நிறைவேற்றவும் நடைமுறைப் படுத்தவும்;

(இ) பிணைப்பொன்றுடனோ அல்லது பிணைப் பொறுப் பின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளையும் கொடைகளையும் அல்லது நன்கொடை களையும் பெற்றுக்கொள்ளுதல்:

ஆயின், சபையானது, கூட்டுத்தாபானத்திற்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத் தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்:

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற் படுத்தல், பேணுதல் மற்றும் மூடுதல்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை சபையானது தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும் ஏற்றுக் கொள்ளுதலும் நிறைவேற்றுதலும் புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் மற்றும் சேவையாளர்களையும் நியமித்தலும் தொழிலுக்கு அமர்த்தலும் பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் மீது ஒழுக் காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தபானத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடை களை அவர்களுக்குச் செலுத்துதலும் :

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங் கிணைதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநடுகளை ஒழுங்குபடுத்துதல்:

(ஒ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினரைப் பயிற்று வித்தல்; அத்துடன்

(ஓ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய அனைத்தையும் புரிதல்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் விதிகள்

**7**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறைவாத பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக்

*காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும் :-*

*(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ்செய்தலும், உறுப் பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப் பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங் களும்;*

*(ஆ) சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்;*

*(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்து வங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;*

*(ஈ) சபையினது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களை கூட்டுதலிலும் அதனை நடாத்துதலிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தலும் நிகழ்ச்சி நிரலும் அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அத்துடன் அவற்றில் அலுவல்களை நடாத்தலும்;*

*(உ) சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;*

*(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமையும்; அத்துடன்*

*(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.*

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் விதியொன்று ஆக்கப் பட்டதைப்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம். அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**8**. சபையானது எந்த உறுப்பினர்களின் பதிவேடொன்றில் அவர்களின் பெயர், முகவரி வேறு முக்கியமான விபரங்கள் என்பன பொறித்திருக்குமோ அந்த உறுப்பினர்களின் பதிவேடு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்*

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரிவு 6(இ) இன் ஏற்பாடுகளுக்கு அமைய கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்குமேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பி லிடப்படுதல் வேண்டும்:

ஆயின், இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் பாகம் 1 இன் கீழ், "உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியாக" உரிமமளிக்கப்பட்ட வங்கியொன்று என்று பொருள்படும்.

(3) இந்தச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப் பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10.** *(1)* *கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.* *கணக்குகளும் கணக்காய்வும்*

*(2)* *கூட்டுத்தாபனம், அதன் வருமானமும், செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.*

*(3)* *கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.*

*(4)* *இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது -*

*(அ)* *இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது*

*(ஆ)* *எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக விருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ, அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,*

*என்று பொருள்படும்.*

**11.** *(1).* *சபையானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், புத்த சாசனம் மற்றும் சமய அலுவல்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம்* *வருடாந்த அறிக்கை*

இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்புடையதோ அந்த ஆண்டை அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாக தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*சபைக்கு வருமதியானவையும் சபைக்கு செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்.*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் சங்கத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற் பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பபடுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக் கலாம்.*

**13.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாகக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைவாகவும், அதனை விற்கவும் ஈடுவைக்கவும், குத்தகைக்கு விடவும், கொடுத்து மாற்றவும் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவும் உள்ள தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்*

**14**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்காக மட்டுமே பயன்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் இலச்சினை*

**15**. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அத்துடன் அவர்கள் தாம் சமூகமளித்தல் எமக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக அத்தகைய கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அத்தகைய சபையினால் முடிவு செய்யப்படக்கூடியவாறான சபையின் பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக் கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**16**. (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கொடுக்கப்பட வேண்டிய அல்லது கைமாற்றப்பட வேண்டிய எல்லா தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எந்ததோதான நிறுவனத்திற்கு ஆதனம் எஞ்சியிருக்கின்றதோ பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர், தோதான நிறுவனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும்

மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் அங்கீகாரத்துடன், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

***17***. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள் கோடல்

***18***. இச்சட்டத்தில், சூழமைவு வேறுவிதமாகத் தேவைப் படுத்தினாலேயன்றி -

‘‘சிகெலவெத’’ என்பது, வாழ்க்கைக்கான அறிவியல் வழியாகும் என்பதுடன் இது சிவ்கெல யக்கா, தேவா, நாகா மற்றும் ரக்சா எனும் நான்கு பிரதான கோத்திரங் களுக்கு உரித்தானதாகும். இக்கோத்திரங்களில் இருந்தே ‘‘சிகெலவெத’’ தோற்றம் பெற்றுள்ளதுடன், சிவ்கெல அல்லது சிகெல மருத்துவம், செவிலியர் பணி, பயிர்ச்செய்கை, தற்காப்புக் கலை, நிகழ்த்துக் கலை, உணவுக் கலாசாரம், கல்விக் கருத்தியல்கள், அழகியற் கலை, இயன் மருத்துவம், மற்றும் எண்ணெய்ச் சிகிச்சை, பாரம்பரியக் குத்தூசி மருத்துவம் (அக்கியுபங்சர்), மரச் செதுக்குவேலை மற்றும் மரக் கலை மற்றும் மருந்தியல் உள்ளடங்கலாகத் தொன்றுதொட்டே தொடர்ந்து வருகின்றது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

***19***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.